Registered as a news paper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | ஆடி – 1972 | விலை 30 | இதழ் 7 |
|---|---|---|---|---|

## பேரருள்திரு இக்கினேசியஸ் கிளெனி, இ. ச.

## ஆண்டகை அவர்களின்

# அபிஷேக வெள்ளி விழாபற்றி

## துணை ஆயரின் திருமுகம்.

புரட்டாதி மாதம் 21ம் திகதி எமது ஆயர் மகா வந். இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் அபிஷேகம் பெற்ற வெள்ளி விழாத் தினமாகும். உங்களில் பலர் அறிந்திருப்பதுபோல் அவர் 1947ம் ஆண்டு ஆடி மாதம் 10ந் திகதி நியமனம் செய்யப்பட்டார். எமது மேற்றிராசனத்தின் முன்னேற்றத்திற்காக அவர் இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் எவ்வளவு பணி புரிந்தார் என்பதையும், வெற்றியடைந்துள்ளார் என்பதையும் என்னைப் பார்க்கிலும் நீங்களே நன்கு அறிவீர்கள். அவர் மூலமாக இறைவன் எங்களுக்குச் செய்த சகல நன்மைகளுக்காகவும், இந்த இருபத்தைந்தாண்டுகளாக நாம் பெற்றுள்ள சகல உபகாரங்களுக்காகவும் நமது உள்ளம் கனிந்த நன்றியை அவருக்குச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.



மகா வந். இக்கினேசியஸ் கிளெனி

எனவே, ஆண்டகையவர்களின் வெள்ளி விழாவினைச் சிறப்பிக்க நமது மேற்றிராசனத்தின் குருக்கள் மன்றத்தின் ஆலோசனையுடனும், ஒத்துழைப்புடனும் ஒரு பொதுக் குழு தெரிவு செய்யப்பட்டு, அதன்கீழ் நிதிக்குழு, விழாக்

[3ம் பக்கம் பார்க்கவும்]

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (36) பொது வழிபாடும் தனிச் செபமும்

"காமல்"

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் தற்காலத்திய திருச்சபையின் பல விடயங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதை நாம் அறிவோம். அவற்றில் ஒரு விடயம், பூசைப்பலி, மற்றும் ஆராதனைச் சடங்குகள் யாவும் அன்றைய நாட்களைப் போன்று ''லத்தீன்'' மொழியிலல்ல, எமது தாய் மொழியிலேயே நடைபெற இந்நாட்களில் வசதி செய்யப்பட்டிருப்பது மிக வரவேற்கக் கூடிய விடயமாகும். பொதுநிலையினர் ஒன்று சேர்ந்து இறைவனுக்குப் பொது வழிபாடு செலுத்தும் வேளை, விசுவாசிகள் ஒன்று சேர்ந்து ஒரு மனமாகி எல்லோரும் ஒரே குடும்பம் எனச் சிந்தனையில் இருத்தி எல்லாம் வல்ல இறைவனை ஒரே குரலாய் பாடிக்களிப் பெய்துவோம். செபம் செய்து மன அமைதி அடைவோம். எனவே, இவ்வாறு பொது வழிபாடு நடைபெறும் வேளை, விசுவாசிகள் மௌனத்தில் தனித்து செபிப்பது விரும்பத் தக்கதொன்றல்ல. இறைவனும் ஏற்காத ஒன்றாகும்.

பொது வழிபாட்டைக் குறித்து கிறீஸ்து நாதரே கூறுகின்றார்: ''இன்னமும் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களில் இரண்டு பேர் தாங்கள் மன்றாடிக் கேட்கும் எந்தக் காரியத்திலும் பூமியில் ஒருமனப்பட்டிருந்தால் அது பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அவர்களுக்குச் செய்தருளப்படும். ஏனெனில், என் நாமத்தினால் எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் நானிருக்கிறேன்'' என்பதாகும்.

எனவே, எமது தாய் மொழியிலேயே எமது மதச் சடங்குகள் நடைபெற வசதி செய்யப்பட்டிருப்பதை உணர்ந்து, அதனால் பயன்பெற முயற்சி எடுப்போம். ஆகையினால் பொதுவழிபாடு நடைபெறும் போது குருவுடன் சேர்ந்து சத்தமாக செபிப்போம், பாடுவோம், எழுந்து நிற்போம், முழந்தாள் இடுவோம், அமருவோம், இறைவனின் அருளை எல்லோரும் பெறுவோம்.

இன்னும் திருப்பலி நடந்தேறும் வேளை செபமாலை மணிகளை உருட்டும் பழமை வாதிகள் பலர் இன்றும் நம்மிடையே இருக்கின்றனர். அவர்களும் இதனை உணர்ந்து தெளிவு பெறுவார்களாக. எல்லா மக்களும், அதாவது பொதுநிலையினர் அனைவரும் குருவுடன் சேர்ந்து பாடுவதால், செபிப்பதால் வருங் காலத்தில் தேவாலயங்களில் தனித்து ஒரு பாடகர் கூட்டத்தையோ வாத்தியக் கருவிகளையோ தயார்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்காதல்லவா?

எனவே, இவ்வாறு இந்நாட்களில் பொதுச் செபத்திற்கு அதிக ஆதரவு அளிக்கின்றபோது தனிச் செபம் செய்யும் முறை அருகிவிட்டது. தனித்து செபிக்க வேண்டிய அவசியத்தை திருச்சபை நீக்கிவிட்டது எனப் பலர் கருதுவதையும் நாம் அறிவோம். ஆயினும் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும். தனிச் செபத்தை திருச்சபையோ வத்திக்கான் பொதுச்சங்கமோ நீக்கிவிட முடியாது. என்றும் எப்பொழுதும் சுதந்திரமான தனிச் செபத்திற்கு உரிமையும் மதிப்பும் தொடர்ந்தே வரும்.

கிறீஸ்துநாதர் தமது வாழ்க்கையில் பல கட்டங்களில் தனிச் செபத்தைக் கடைப் பிடித்தார். அதிக முக்கியமான கட்டமொன்றை நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதாவது பெரிய வியாழக்கிழமை மாலை தம் சீடர்களில் இராயப்பர், இயாகப்பர், அருளப்பர் எனப்படும் மூவரை மாத்திரம் தம்மோடு அழைத்துக் கொண்டு ''ஜெத்சமெனி'' என்னும் பூங்காவனத்திற்குள் சென்றவர் அம்மூவரையும் அவ்விடத்திலே விட்டு விட்டு ஒரு கல்லெறி தூரம் வரை சென்று தனிமையிலே தம் பிதாவை நோக்கி தாம் எதிர்கொள்ளப்போகும் பாடுகளை நினைந்து துக்கமடைந்தார், வேதனைப்பட்டார், அப்பாடுகளைத் தாம் மேற்கொள்ளக் கூடிய பலத்தை, வல்லமையை தமக்கு தந்தருளும்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அண்ணலே! ஆண்டவரே! நீர் நீதியும் நேர்மையும் உள்ளவர்.

அந்தனி ஜோண் அழகையா அடிகள்

சூழலும் உலகைப் பார்க்கின்றேன். அதன்கண் நடமாடும் நவீன மாந்தரைக் காண்கின்றேன். வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் வெறுக்கப்படுவதையும், நயவஞ்சகர்கள் நல்லவர்கள்போல் நடித்து, சமுதாயத்தையும் உலகையும் ஏமாற்றிப் பிழைத்துப் பாராட்டப்படுவதையும் கண்டு கண் கலங்குகிறேன். நல்லவர்கள் வாழ்வைக் கசக்க அப்பப்பா எத்தனைபேர்! வறுமையும், இல்லாமையும், போதாமையும், துன்பமும் இவர்களையா வாட்டவேண்டும்! தீயவர்களின் கை ஓங்குகிறது. நல்லவர்களின் கை தாழ்கிறது. ஏன் இந்த ஏற்றத்தாழ்வு வாழ்விலே ஆண்டவரே? தரணியின் தளபதியே ஏன் இந்த நிலை நல்லவர்களுக்கு? அன்று எரேமியாஸ் என்னும் இறைவாக்கினர் கேட்ட அதே வினவை நான் இன்று கேட்கிறேன். ஏன் பாவிகள் வாழ்க்கையில் வசதி படைத்தவர்களாக வாழ்கின்றார்கள்? ஏன் நல்லவர்கள் இருக்கக்கூட இல்லிடம் இன்றித் தவிக்கின்றார்கள்?

ஆண்டவரே! நீர் என்னுடைய நண்பரல்லவா? ஆனால் நீர் என்னைப் பகைவனைப் போன்று நடத்துகின்றீர்! நான் என் முழு வாழ்வையும், உடலையும், ஊனையும், உயிரையும் உமக்கு அர்ப்பணித்தேன். நான் வாழ்வில் அடைந்த பயன், துயரமும் தோல்வியும், ஏக்கமும் ஏமாற்றமுந்தான். கள்ளர்களும் காமவெறியர்களும், குடிகாரர்களும், எத்தர்களும் தங்கள் ஓய்வு நேரங்களில் அடையும் வெற்றியைக்கூட நான் பெறுவதில்லை. ஆண்டவரே! தரணியின் தலைவனே ஏன் இந்த நிலை? ஏன் இந்த வேறுபாடு?

படைப்பின் தலைவா! பூஞ்சோலையிலே யுள்ள பூக்கள் மலர்கின்றன. நாற்றிசையும் நறுமணத்தைப் பரப்புகின்றன. தோட்டத்திலேயுள்ள மரங்கள் காய்க்கின்றன. கனிகளை மாந்தருக்கு அளிக்கின்றன.

ஆகாயப்பறவைகள் தங்கள் குஞ்சுகளுக்குக் கூடுகளைக் கட்டுகின்றன. அல்லும் பகலும் உமது மலரடியில் கிடக்கும் நான் மலராமல், கனியாமல், படைக்காமல் பயனற்றுக் கிடப்பதேனோ?

பூவினங்களும் புள்ளினங்களும் வசந்த காலத்தை அனுபவிக்கின்றன. நானோ இலையுதிர் காலத்தை நோக்கிப் பயணம் செய்கின்றேன். நானோ கடவுளுக்கும், காலத்துக்கும் அண்ணகனாய் இருக்கிறேன். கடவுளின் அரசு வளர்ந்திட நான் அண்ணகனாக இருக்கிறேன்.

கதிரவன் களிமண்ணைக் கடுமையாக்குவதும், மெழுகுவர்த்தியை உருக்குவதும் தத்தம் தன்மைக்கேற்ற படியல்லவா? தந்தை தனயனோடு கடுமையாயிருப்பதின் காரணம் அவனுடைய நன்மையையும், முன்னேற்றத்தையும் குறித்தல்லவா!

மரத்தை நாட்டினவன் நீரை ஊற்ற மறப்பானோ! பட்டுப்போகும் வேரைத் தழைக்கச் செய்யும். எனவே விண்ணிலிருந்து அருள் என்னும் மழையைப் பொழியச் செய்யும். அப்பொழுது நான் மலர்வேன், கனிவேன், படைப்பேன், பயனடைவேன். ஆண்டவரே! அண்ணலே! நீர் நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர். ★

## பேரருள்திரு இக்கினேசியஸ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழு, வரவேற்புக்குழு, ஞாபக வெளியீட்டுக் குழு, மறைக்கல்வி தேவ அழைத்தல் கண்காட்சிக்குழு என்பன நியமிக்கப்பட்டுள்ளன.

இக் குழுக்களுக்குச் சகல உதவிகளைக் கொடுக்குமாறும் விசேட மன்றாட்டுகள், முக்கியமாக **ஆடி 10ம் திகதியும், புரட்டாதி 21ம் திகதிக்கு முன்னதாகவும்,** செய்யுமாறும் அனைவரையும் அழைக்கின்றோம்.

தற்பொழுது அமெரிக்காவில் இருக்கும் நமது ஆண்டகையவர்கள் வெள்ளிவிழாவிற்கு முன்னதாக நம் மத்தியில் வந்து சேர்வாரென எதிர்பார்க்கின்றோம்.

✠ **வ. தியோகுப்பிள்ளை,**
துணை ஆயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மன்றம்

## 1. போர்த்துக்கீசர் காலத்தில் ஈழத்தில் எழுந்த கத்தோலிக்க தமிழ் இலக்கிய நூல்கள்.

கத்தோலிக்க கிறிஸ்து மதத்தை இலங்கையில் முதல்முதல் பரப்பினவர்கள் போர்த்துக்கீசர்தான் என்பதை யாவரும் அறிவர். திருமறையைப் போதிக்க வந்த போர்த்துக்கீச கத்தோலிக்க குருக்கள் இலங்கையில் அவ்வேளை பொதுமக்களால் பேசப்பட்டுவந்த தமிழ், சிங்களம் என்னும் இரு மொழிகளையும் கற்று, நாட்டு மக்கள் இலகுவாய் விளங்கக்கூடிய முறையில் மறைக்கொள்கைகளைப் போதித்தார்கள். மனந்திரும்பிக் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களுள் சிலர் தாய் மொழியில் புலமை உள்ளவர்களாய் இருந்தமையால், இவர்களின் துணைகொண்டு செபங்கள், கீர்த்தனைகள், ஞான உபதேச நூல்கள் ஆகியவற்றை அவர்கள் இயற்றி, புதுக் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். பொதுமக்கள் பெரும்பாலும் கல்வியறிவு குறைந்தவர்களாய் இருந்தமையால், இவை யாவற்றையும் அவர்கள் மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது.

இவ்வாறு கொழும்பில் புனித பிரான்சுஸ்கு அசிசியார் சபைக் குருக்களின் தலைவராயிருந்த **யோான் தே விலா தே கொண்டே** சுவாமியார் தமிழ்ப் புலமை பெற்றிருந்த ஒரு புதுக் கிறிஸ்தவரின் உதவியோடு ஞான உப

### பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை

**ஆண்டகை.**

தேச நூல் ஒன்றைக் கீர்த்தனை வடிவில் இயற்றி, பள்ளிகளில் பிள்ளைகளுக்குப் படிப்பித்தார். அதோடு கடவுள் பேரிலும் தேவ மாதா பேரிலும் இயற்றப்பெற்ற சில கீர்த்தனைகளும் சேர்க்கப்பட்டன. இப்பாடல்கள் யாவும் மன்னாருக்கும் அனுப்பப்பட்டு, அங்கு இந்தியாவிலிருந்து வந்து குடியேறியிருந்த கத்தோலிக்க மக்களால் மிகவும் ஆவலுடன் ஏற்றுப் பாடப்பட்டுவந்தன. மன்னாரில் அவ்வேளை திருப்பணியாற்றிவந்த **என்றிக் என்றிக்கெஸ்** என்னும் இயேசு சபைக் குருவானவர் இப் பாடல்களில் காணப்பட்ட சில பிழைகளை ஒரு தமிழ்க் குருவானவரின் உதவியோடு திருத்தினார் (என்றிக் என்றிக்கெஸ் 1561 மார்கழி 19இல் எழுதிய கடிதம் காண்க; See: Article in 'Tamil Culture' Vol. II p. 231-2). இப்பாடல்களை அவர் அச்சேற்றவும் விரும்பினார். ஆனால், அக்காலத்தில் தமிழ் அச்சகம் இன்னும் இந்தியாவில் நிறுவப்படவில்லை.

என்றிக் என்றிக்கெஸ் சுவாமியார் மன்னாரில் 1561ல் இருந்து 1564 வரை திருத்தொண்டாற்றியபின் இயேசு சபையினரால் புன்னைக்காயலில் 1566ல் புதிதாக நிறுவப்பெற்ற சர்வ கலாசாலைக்குத் தலைவராக நியமனம் பெற்றார். அவரது பெரு முயற்சியால் தமிழ் நூல்களைப் பரப்புவதற்கென கொச்சினில் 1577ல் முதல் தமிழ் அச்சகம் நிறுவப்பட்டது. இவ் அச்சகம் அச்சேற்றிய முதல் நூலின் பெயர் "**தம்பிரான் வணக்கம்**" ஆகும். இது என்றிக்கெஸ் சுவாமியார் மன்னாரில் ஞானத்தொண்டாற்றிய போது திருத்திப் பயன்படுத்திய அதே வேத விளக்கக் கீர்த்தனை நூலாக இருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. (எம். ஆர். அடைக்கலசாமி: **தமிழ் இலக்கிய வரலாறு** ப. 273 காண்; See: 'Tamil Culture' Vol. II p. 230) இதைத் தவிர 16ம் நூற்றாண்டில் வேறு தமிழ் கத்தோலிக்க நூல்கள் தோன்றியது பற்றி தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

1612ல் கொச்சின் மறை ஆயர் தமது இலங்கையின் ஞானவிசாரணையின்போது நீர் கொழும்புக்கு அருகாமையிலுள்ள கைமல் என்ற ஊருக்குச் சென்றபோது, அவ்வூர்க் கிறிஸ்தவர்கள் "**உலக படைப்பும் கிறிஸ்து நாதரின் மனித அவதாரமும்**" என்ற தமிழ்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலக்கிய மன்றம்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நாடகம் நடித்ததாக அறிகிறோம் (See: Tamil Culture, Vol. II, p. 235). ஆனால் இந் நாடகத்தின் கையெழுத்துப் பிரதி இதுவரை எவருக்கும் கிடைக்கவில்லை.

1623ல் இருந்து இயேசு சபைக் குருக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் திருத்தொண்டாற்றி வந்தனர். அந்நாட்களில் தெல்லிப்பளையே அவர்களது பிரதான நிலையமாக விளங்கிற்று. அங்கு அப்போஸ்தலர்களான புனித இராயப்பர் சின்னப்பர் பெயரால் ஓர் அழகான ஆலயம் கல்லால் கட்டப்பட்டிருந்தது. இவ் ஆலயம் 1633ல் மந்திரிக்கப்பட்டபோது பல நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டதாக அறிகிறோம். ஆனால், இவற்றில் எதுவும் இதுவரை எவருக்கும் கிடைக்கவில்லை ஆலயத்திற்கு அருகாமையில் ஒரு நாடக மண்டபமும் அமைக்கப்பட்டிருந்தது. அதில் திருவிழாக் காலங்களில் வேதாகம சரித்திர நாடகங்கள் கத்தோலிக்க மக்களினதும் பிற மதத்தினரதும் படிப்பினைக்காக இயேசு சபைக் குருமாரின் ஆதரவோடு நடித்துக் காட்டப்பட்டன என்றும் அறிகிறோம் (**The Jesuits in Ceylon**, by Fr. S. G. Perera, S. J. p. 107). ஆனால் இவைகளின் பிரதிகளும் நமக்குக் கிடைக்கவில்லை.

17ம் நூற்றுண்டின் நடுப் பகுதியில் இயற்றப்பெற்ற இரு நூல்கள் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றப்பட்டு அச்சேற்றப்பட்டுள்ளன. அவை: **சந்தியோகுமையோர் அம்மானை, ஞானப்பள்ளு** என்பனவாகும். இவை இரண்டையும்பற்றி சற்று விரிவாக ஆராய்தல் நன்றாகும்.

### (1) சந்தியோகுமையோர் அம்மானை

போர்த்துக்கீசர் காலத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ள முதல் கத்தோலிக்க தமிழ் இலக்கிய நூல் சந்தியோகுமையோர் அம்மானை என்று கூறின் அது பிழையாகாது. இது 1647ல் பேதுரு என்ற புலவர் ஒருவரால் தெல்லிப்பளையில் இயற்றப்பெற்றது என்பதை புலவர் அவர்களின் மாணுக்கன் ஒருவன் அந்நூலுக்கு எழுதி அளித்துள்ள **பொதுப் பாயிரத்திலிருந்து** அறிகின்றோம்.

''வல்லிக்கிராமமதில் வளர்ந்த திரு நகராம்
தெல்லிக்கிராமமெனுஞ் சீர்சிறந்த பேருரில்
.............................................................
ஆரியர் கோத்திரத்தோன் அன்புநெறி
நீதியுள்ளோன்
சீரிய பேதுருவென்போன் சிந்தைமிகக் கொண்டாடி
.............................................................
எப்பொருட்கும் கர்த்தாவை எங்கும்
நிறைவோனை
தப்பில்லா நீதியுரை தாய்மரியாய் பெற்றெடுத்து
ஆண்டாயிரமு மறுநூறு மாறேழும்
மீண்டுமோரஞ்சும் விளங்கவே சென்றவந்நாள்
கார்த்திகை மார்கழியாங் காணுமிரு மாதமதில்
கீர்த்தியுள்ள செந்தமிழாற்
கிளத்தினரிக்கதையை.''

இயேசு சபைக் குருமார் பச்சிலைப்பள்ளி மாவட்டத்திலுள்ள கிளாலி என்னும் சிற்றூரிலும் திருமறைத் தொண்டாற்றி, அங்கு அப்போஸ்தலரான புனித பெரிய யாகப்பர் பெயரால் ஓர் ஆலயம் அமைத்தனர். அவ்வாலயத்திற்கு பக்தர்கள் ஆண்டுதோறும் திருவிழாக் கொண்டாடத் திரள்திரளாகச் சென்றனர். அவர்களது ஞான நலன்கருதி பேதுரு புலவர் புனித பெரிய யாகப்பரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் செய்த புதுமைகளையும் அம்மானை வடிவில் எழுதி அளித்தார். இதை நூலின் ஆரம்பத்தில் அவரே அழகாகக் கூறுகின்றார்:

''வாம்பரிமேலேறி மகிமைச் சுவடணிந்து
நாம்பணிய நீதி நடத்து சந்தியாகுவுக்கு
எச்சரிக்கையாக விலங்கியயாழ்ப்பாணமதில்
பச்சிலைப்பள்ளியென்னும் பற்றிற் கிளாலியிலே
கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
நம்பிச் சமைத்துவைத்த நல்லாலயத்திருந்து
ஆருந்தமைத்தேடி அஞ்சலிக்க வாறவர்க்குத்
தேறுமனந்தநவஞ் செய்தேயிருப்பதுமெய்.
செய்நவத்தினற்கோடி சனங்களிங்கே வாருர்கள்
ஐயமறவிங்குவந்தோ ராசையுற்றுக் கேட்பதற்கு
அம்புவியெங்கும் அரியகதிர்போல் விளங்கும்
கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
கூடலெனும் மதுரைக் கொற்றநகர்
தன்னில்வந்து
பாடுமகவல் பழுதில்லாப்பாவாக்கி
இங்கனுப்பும் புஸ்தகமும் ஏற்றவர்
சொற்படிக்கும்
சங்கத்தைச் சேர்ந்திருக்கும் சற்குருக்கள்
சொற்படிக்கும்
.............................................................
துங்ககவிதைசெய்யத் துணிந்தேனேயம்மானை''

சந்தியோகுமையோர் அம்மானை காப்பிய இலக்கணங்கள் பொருந்திய ஒரு பெருங்காவியமாக விளங்குகின்றது. அது காப்பு,

(9ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அழுவதா? சிரிப்பதா?

கொழும்பு,
20-5-72

அன்புள்ள தம்பி,

நலம். நலம் மலர்க. குருமார் அங்கி அணிவதைப்பற்றிய என் கருத்து உன்னை ஒத்தவர்களின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை விளைத்துள்ளதென்பதை என்னால் நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது. உனது கடிதத்திற் காணப்படும் கேள்விகளுக்கேற்ற பதிலை எழுதுமுன், நீ இப்பொழுது உண்மையை உணர்ந்து இருக்கிறாய் என்பதைக் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி கொள்கிறேன். ஏனெனில் குருமார் அங்கி அணிய வெண்டுமென கருதும் நானே, உனது அம்மாவோ, ஏனைய இல்லற வாசிகளோ விரும்புவது, ஒன்றே ஒன்று தான் என்பதை நன்றாக நினைவில் வைத்துக்கொள். அஃதாவது: **குருமார் இல்லறவாசிகள் போன்று உடையணிதல் கூடாது என்பதே.** உனது கடிதத்திலும் ''குருக்கள் அங்கிக்குப் பதிலாக வேறு ஓர் அடையாளச் சின்னத்தை அணிந்துகொண்டால் அதுபோதுமல்லவா? என்று கேட்ட நீ, அடுத்து எழுதியுள்ளதை வாசித்தபொழுது அழுவதா, சிரிப்பதா என்று எனக்கே புரியவில்லை. ஏனெனில் ''அதன் கீழ் குரு என்ற எழுத்தைப் பதித்தால் நன்றாயிருக்குமல்லவா''? என்று கூறியுள்ளாய்.

தெரியாத ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவோ, அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவோ தான் ஒரு பொருளின் பெயரை எழுதி வைப்பார்கள், பொருட்காட்சிச் சாலையில், நூதன சாலையில், கண் காட்சிச்சாலையில், வியாபார நிலையங்களில்; ஆனால் நமது அருட்திரு தந்தையர் ''நான் ஒரு குரு'' என எழுதி ஒட்டித் திரியுமளவிற்கு காட்சிப் பொருளோ, வியாபாரப் பொருளோ அல்ல என்பதை எண்ணிக்கொள். நான் கல்லூரியில் படித்த காலத்தில் சித்திரம் கீறவேண்டியிருந்தது. ஆனால் சித்திரம் பெரும் தரித்திரம் என எண்ணிக் கீறுவேன். தங்கை நிர்மலாவோ ''அண்ணா என்ன கீறியுள்ளீர்கள், தயவுசெய்து நீங்கள் கீறும் சித்திரத்தின்கீழ் என்ன கீறியுள்ளீர்கள் என்பதை விளக்கமாக எழுதி வைத்தீர்களானால் நன்று, எனக் கேலி செய்வாள். ஆம் தம்பி! ''எழுதி ஒட்டலாமே'' என்று நீ எழுதியதைப் படித்தபொழுது தங்கை கூறியவை என் நினைவில் வருகின்றன. ஏனெனில் வாழையடி வாழையாக எமது குருமார் அங்கி அணிவதையே எம்மவர் கண்டு பழக்கப்பட்டுவிட்டனரல்லவா?

திருச்சபையின் ஆதிகாலச் சரித்திரம் படித்துக் கொண்டிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. படித்ததனால் தத்துவம் பேசுகிறேனென்று நினைக்காமல் சற்று சிந்தித்துப் பாருங்கள்'' எனக் குறிப்பிட்ட நீ, துறவிகள், சகோதரர்கள், குருத்துவ மாணவர்கள், குருக்கள், மேற்றிராணிமார் ஆகியோர் அங்கி அணிகிறார்கள்; ஆயினும் எல்லோருக்கும் ஒரேவிதமான மரியாதை கிடைக்கவில்லையே'' எனக் குறிப்பிட்டுள்ளாய். இது உனது மனதில் இருக்கும் ஆற்றாமையை வெளிக்காட்டுகின்றது போலும்.

அங்கி அணிந்திருக்கும் குருமாரையும், மாண்புமிகு ஆயரையும் இல்லறவாசிகளாகிய நாங்கள் அடையாளம் காண்கிறோமென்றால், வெள்ளை அங்கியும் கறுப்புப் பட்டியும் குரு கட்டுகிறார்; மாண்புமிகு ஆயர்கள் வெள்ளை அங்கியும் சிவத்தப்பட்டியும் கட்டுகிறார்கள். சகோதரர்கள் வெள்ளை அங்கியும் வெள்ளை பட்டியும் கட்டுகிறார்கள். இவைகளைக் கொண்டு நாங்கள் ஒவ்வொருவரும் யார் யார் என்பதை அறிந்துகொள்கிறோம். அதற்கேற்ப மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள். அதைவிடுத்து, எல்லாரும் நீளக் காற்சட்டையும், நீளச் சேட்டும் அணிந்தால் என்ன நடைபெறும் என்பதை எண்ணிப்பார்.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்'' என்ற வள்ளுவன் வாக்கை திருச்சபையின் ஆதிகாலச் சரித்திரத்தை அலசி ஆராய்ந்து படிக்கும் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நன்று.

தம்பி,

இந்து சமயத் துறவிகள் காவி உடையும், பௌத்த துறவிகள் மஞ்சள் உடையும் ஏன் அணிகின்றார்கள்? சாதாரண மக்களிடமிருந்து

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அழுவதா? சிரிப்பதா?...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தம்மை வேறுபடுத்திக்காட்டுவதுடன் தாங்கள் துறவிகள் என்பதை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்குத் தானே.

எமது திருச்சபையில் இருப்பதுபோன்று வழிநடத்துவதற்கு ஓர் அமைப்பு பல மதங்களில் இல்லாவிட்டாலும் சில கொள்கைகளை, நடைமுறைகளை அவர்கள் மாற்றாமல் கடைப்பிடிப்பது ஏன், எதற்காக என்பதை எண்ணிப்பார், தம்பி. குருமார் அனைவரும் நீளக்காற்சட்டையும் சேட்டும் அணிந்தால் நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கும் துறவிகளுக்கும் வேறுபாடு இருக்க வேண்டும். **இலகுவில் அவர்களை அனைவரும் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்** என்பதே என்னை ஒத்தவர்களின் கருத்தாகும்.

தமிழில் உரைநடைதந்த ராபட் – டீ – நோபிலி அவர்கள் காவியுடைதரித்ததிற்கும் குருமார் அங்கி தரியாமல் நீளக்காற்சட்டை அணிந்து திரிய முயல்வதற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம் உண்டு என்பதை மறந்து விடாதே. அந்த வேதபோதகரின் செயல்களை எடுத்துக்காட்டி ''உங்களைப் போன்றவர்களும் திருச்சபையைப் பாதுகாப்பது தங்கள் கடமை என எண்ணிய சில குருக்களும்கூட அவரை ஏளனம் பண்ணி அவர் செயலைக் கண்டித்தனர்'' எனத் தொடர்பு படுத்த முயல்வது மொட்டம் தலைக்கும் முளங்காலுக்கும் முடிச்சுப் போட முயன்றதை ஒக்கும்.

ஏனெனில் கிறிஸ்துவின் இரட்சணியத்தை, அவரின் தெய்வீகத்தன்மையை அறிந்துகொள்ள அப்பொழுது மதுரையில் வாழ்ந்த பிராமணர்கள் போன்ற உயர் சாதியினர் விரும்புகின்றார்கள் இல்லை, தன்னண்டை நெருங்கி வருகின்றார்கள் இல்லை என்பதை எண்ணி ஏங்கி, மறை பரப்புப்பணி நன்கு நிறைவுற என்ன செய்யலாம் என ஆய்ந்து, இந்துமதத் துறவிகள்போற் தானும் வாழ முனைந்த அவரின் பெருந்தன்மை என்னே! இரட்சணியத்தை அனைவர்க்கும் கொடுத்தாகவேண்டுமென எண்ணி அவர் வேட்டியும் சால்வையும் அணியவில்லையே, தம்பி!

தான் ஒரு துறவியென வாழவிரும்பினார். அனைவரும் அதனைத் தெரிந்துகொள்ள வேண்டுமென எண்ணிக் காவியுடை தரித்தார், கமண்டலம் ஏந்தினார், முப்புரிநூல் அணிந்தார். அனைவரும் அவரைத் துறவி என அழைத்தனர். ஆனால் இன்றைய எமது குருக்களின் நிலை அப்படியில்லையே.

அடுத்ததாக, எத்தனையோ நூற்றாண்டு காலமாக அணிந்து வந்த அங்கியை மாற்ற வேண்டிய அவசியம் – அவசரம் தற்பொழுது ஏன் என்பதுதான் எமக்குப் புரியாத புதிராக இருக்கின்றது. அன்றைய மக்கள் அவர்களைக் குருக்களாக மதித்தது அவர்களின் உடையினால் அல்ல, ஆனால் அவர்களின் அபிஷேகத்தால் எனக் குறிப்பிட்டுள்ளாய். இவர் அபிசேகம் செய்யப்பட்டவர் என்பதைக் காட்ட, சாதாரண மக்களில் இருந்து வேறுபடுத்த—ஏதோ ஒரு அடையாளம் இருக்காமலா இருக்கும். நன்றாக யோசித்துப்பார் – திருச்சபையின் ஆதிகால சரித்திரத்தை அவசரப்படாமல் ஆறுதலாகப் படித்துப்பார்.

வணக்கம்.

இப்படிக்கு,

உனதன்பின்

அரியண்ணா.

## கட்டுரைப் போட்டி

எமது ஆயர், பேரருள்திரு இக்னேசியஸ் கிளெனி இ. ச. ஆண்டகை அவர்களின் 25 வருட ஞான ஆட்சிப்பணி பற்றி ஒரு கட்டுரை எழுதுக. முதலிடம் பெறும் கட்டுரை 'தொண்டன்' புரட்டாதி மாத இதழில் பிரசுரிக்கப்படுவதுடன், அதற்குத் தகுந்த பரிசும் வழங்கப்படும்.

நிபந்தனைகள்:—

1. கட்டுரை ½ Foolscap இதழின் இரு பக்கங்களில் அடங்கவேண்டும்.
2. கட்டுரை 5-8-72க்கு முன் ஆசிரியர் தொண்டன்; ஆயர் இல்லம், மட்டுநகர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. 'தொண்டன்' ஆசிரியர் தீர்ப்பு முடிவானதாகும்.

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவீனம்

அனைத்தையும் படைத்துக் காத்து உம் இரக்கத்தின் கொடைகளை எம்மீது பொழியும் செம்மலே! மனுக்குலம் மகிமையடைய மரியன்னை மடியினிலே அவதரித்த மீட்பரே! நீர் காட்டிச் சென்ற பாதையிலே பலர் செல்லும்போது சிலர் மட்டும் ஏன்தானோ எதிர்த்திசையில் செல்லுகிறார்கள்? அவர்களை நும் ஒளியின் பாதையில் அழைத்தும், இருளில் இருக்கும் மர்மம்தான் என்னவோ?

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் இப்பிறவியில் உம்மை அறியாமல் வீண் நாஸ்திகம் பேசி உம் திருச்சட்டத்தை அழிக்கிறார்களே. இருட்டில் விண்ணில் உடுக்கூட்டங்கள் தென்படுகின்றன. ஆனால் கதிரவன் வரவு கண்டு அவை தென்படுவதில்லை. ஆதலால், பகலில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அப்படித்தானே ஒரு சிலர் பிதற்றுகிறார்கள். இவர்கள் அஞ்ஞான நிலையில் இருந்துகொண்டு உம்மைக் காணமுடியுமா?

பழைய ஏற்பாட்டில் கடவுள் யாருக்கெல்லாம் தரிசனமாகியிருக்கிறார் என்று அதைப் படித்தவர்களுக்குத் தெரியும். படிக்காத எத்தர்களுக்கு எங்கே புரியப் போகிறது. கண்டால்த்தானே அவர்கள் விசுவசிப்பார்கள். புதிய ஏற்பாட்டிலே இயேசு புனித தோமையாரின் மூலமாகப் போதித்த விசுவாசத்தை அவர்கள் மறந்து விட்டார்களோ? "காணாமல் விசுவசிப்பவனே பாக்கியவான்" என்று திருவாய் மொழிந்தருளியதைக் கிரகிக்கவில்லையா? ஏனென்றால் இவர்கள் மூன்று கால் முயலையல்லவா பிடித்துவிட்டார்கள்.

ஆழமான கடலில் நல்முத்துக்கள் இருக்கின்றன. அவற்றை எடுப்பதற்கு ஒருவன் எவ்வளவோ ஆபத்துக்களை மேற்கொண்டு துணிகிறான். ஒருதரம் கடலில் மூழ்கும் போது முத்துக்கள் தென்படவில்லையானால் கடலில் முத்துக்கள் இல்லை என்று தீர்மானிக்கலாமா? அடிக்கடி மூழ்கினாற்றானே இறுதியில் பலன் கிட்டும். கடவுள் தரிசனமும் இப்படித்தான். முதல் முயற்சி பயனற்றதானால் அதைரியப்படாமல் சிரமப்பட்டால் கடவுளைக் காணமுடியும். அதை விட்டு நாஸ்திகம் பேசி என்ன பயன்?

எண்ணற்ற சுகபோகங்களைத் தருவித்த இறைவனுக்கு நாமளிக்கும் காணிக்கை "அவர் இல்லை" என்று வாதிடுவதுதானா? நம் பாவங்களையெல்லாம் ஒன்று திரட்டிச் சிலுவை வடிவில் சுமந்து உயிர் நீத்த உன்னதரை உங்களுள்ளம் ஏற்க மறுக்கிறதா? "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று கூடத் தெரியாதா?

தங்கள் கண்களிலிருக்கும் கோளாறுகளைத் தங்களாலேயே திருத்த முடியாதவர்கள், பிறர் கண்களிலிருக்கும் கோளாறுகளைத் திருத்த முற்படுகிறார்கள். இக் கெட்ட கனி கொடுப்பவர்களை வேரோடு பிடுங்கி அக்கினியிலல்லவா போடவேண்டும். வைக்கோல் பட்டறையில் கிடக்கும் நாய்போல, மோட்சத்தின் கதவை அடைத்துக் கொண்டு தாங்களும் பிரவேசிப்பதில்லை; பிரவேசிக்கவிரும்புபவர்களையும் பிரவேசிக்க விடுவதில்லை.

நல்ல மேய்ப்பனின் வியத்தகு நற்கொள்கைகளை அனுசரிக்காமல் எதிர்க்க முற்படுகின்ற இவ்வறிவீனர்களுக்கென்றே ஆண்டவர் "ஆழமாய்த் தோண்டி கற்பாறையின் மேற் கட்டப்பட்ட வீட்டை" உவமையாகச் செப்புகிறார். இவ்வீடு வெள்ளம் புரண்டு வந்து நதியானது அந்த வீட்டின் மேல் மோதியும் அதை அசைக்கமுடியாது. ஆஸ்தி

[15ம் பக்கம் பார்க்கவும்]

அ. பி. றஞ்சன் குரூஸ்
புனித திரேசாள் தேவாலயம்
வாழைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்து கத்தோலிக் திருச்சபையில் புதியதோர் சங்கம் இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஊழியர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் அங்குரார்பணக் கூட்டம், 1-5-72ல் கண்டி வீரக்கோன் 'காடினில்' உள்ள ''செற்றிக்'' மண்டபத்தில், டாக்டர், பி. ஏ. ஜே. பி. அன்ரனயினஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

இப்புதிய தொழிற்சங்கம் (Trade Union) கண்டி காலி மேற்றுசனங்களில் இருந்து வருகை தந்த, திருச்சபை ஊழியர்கள் மத்தியில் நடைபெற்றது.

மேற்படி ஊழியர்கள், கண்டியில் உள்ள சமூக, பொருளாதார பயிற்சி நிலையத்தில் ஒரு மாதப் பயிற்சி பெற்ற பின்னரே சங்கமாகக் கூடினர்.

கௌரவ விருந்தினர்களாக, அதி. வண. தனிநாயகம் அடிகளும், பிலிப்பைன்ஸ் நாட்டில் தொழிற் சங்கத் துறையில் தேர்ச்சி பெற்ற, திருவாளர் சேவ்ஸ் அவர்களும் வீற்றிருந்தனர்.

இன்று அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படும் இச் சங்கமே ஈழத்து கத்தோலிக்க திருச்சபையின் முதல் தொழிற் சங்கமாகும். இதிலிருந்து விசுவாசிகள் விழித்துக் கொண்டனர் என்பது தெரிகிறது.

இத் தொழிற் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள்:

| | |
|---|---|
| தலைவர்: | திரு. ஏ.சந்தியாகுப்பிள்ளை-காவத்தை. |
| உப தலைவர்: | திரு. வை.எஸ். செபஸ்தியான்-ருகலே. |
| காரியதரிசி: | திரு.எஸ். பாக்கியநாதன் - ஹட்டன். |
| உப காரியதரிசி: | திரு. ஏ. அல்போன்ஸ்-நாவலபிட்டி. |
| தனாதிகாரி: | திரு. எம். ஞானபிரகாசம்-கண்டி. |
| உப தனாதிகாரி: | திரு. ஏ. சவரிமுத்து-மாத்தளை. |

வெளி–நிர்வாகிகள் ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

பங்குக் கோவில்களிலும், கன்னியர் மடங்களிலும், கத்தோலிக்க ஸ்தாபனங்களிலும், உழைத்து ஊதியம் பெறும் சகலரும், இச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:-

**திரு. எஸ். பாக்கியநாதன்**
திருச்சிலுவை ஆலயம்,
ஹட்டன்.

# இலக்கிய மன்றம்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பாயிரம், கதையின் வரலாறு, அவையடக்கம், முடிவுரை முதலிய அம்சங்களுடன் இரு பாகங்களைக் கொண்டு விளங்குகின்றது. முதலாம் பாகம் 37 பிரிவுகளையும், இரண்டாம் பாகம் 13 பிரிவுகளையும் அடக்கியுள்ளன. ஒவ்வொரு பிரிவும், தலைப்பாக ஒரு விருத்தத்தையும் அம்மானையையும் கொண்டுள்ளது. முதலாம் பாகத்தில் புனித யாகப்பரின் வாழ்க்கை வரலாறு, மரணம் அவரது திருமேனி இஸ்பாஞ்ஞா நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டு காம்போஸ்ரெல்லா என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பெற்று, மக்களால் வணங்கப்பட்டு வருதல் ஆதியன வர்ணிக்கப்படுகின்றன. இரண்டாம் பாகத்தில் இஸ்பாஞ்ஞா நாடு துலுக்கருக்கு எதிராக நடத்திய சுதந்திரப் போரில் புனித யாகப்பர் அற்புதமாய்த் துணை புரிந்தமையும், வேறு சில புதுமைகளும் பாடப்படுகின்றன. இந் நூல் இனிய ஓசையும் உயர்ந்த நடையுமுடைய ஓர் இலக்கியமாக அமைந்திருத்தல் அதைப் படிக்கும்போது இலகுவில் புலப்படுகின்றது.

இவ் அரிய இலக்கிய நூல் 1894ம் ஆண்டு வரை ஒரு கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வந்து, அவ்வாண்டில் முதல் முறையாக அச்சுவேலி ஞானப்பிரகாச அச்சகத்தினுல் அச்சேற்றப்பெற்று வெளியிடப்பட்டது. அதன் மூன்றுவது படிப்பு அதே அச்சகத்திஞல் 1930ல் செய்யப்பட்டது. இப்பதிப்பில் விளக்க உரைகளோ, ஆராய்ச்சிக் குறிப்புகளோ இடம்பெறுமை பெரும் குறை என்றே கொள்ளவேண்டும். ஆகவே, திருத்தங்களையும், விளக்க உரைகளையும், ஆராய்ச்சிக் குறிப்புகளையும் அடக்கியுள்ள ஒரு புதிய பதிப்பு விரைவில் வேண்டப்படுகின்றது.

(வளரும்)

## திருகோணமலை — மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்.

## நினைவூட்டல்

பொது நிலையினரின் அப்போஸ்தல பணிக் குழுக்கள் தங்கள் வருடாந்த அறிக்கைகளை **ஆடி 31க்கு முன்** பங்குச் சபைச் செயலாளருக்கு அனுப்பவேண்டும் (உபவிதி 7).

செயலாளர்
**தி. ம. மே. ஐ. சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மே மாதம் திருகோணமலையில் நடைபெற்ற மாதா சபைகளின் மகாநாட்டிற்குத் துணை ஆயர் அளித்த ஆசியுரை.

ஆயர் இல்லம்,
மட்டுநகர்.
16–5–72.

இம்மாதம் 26ம், 27ம் தேதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் எமது மறைமாவட்டத்தின் கிறிஸ்தவ வாழ்க்கைச் சமூகங்களின் ஆண்டு மகாநாட்டிற்கு ஒரு ஆசி உரை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம் மகாநாட்டின் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ''முழு மனிதனினதும் எல்லா மனிதரினதும் முன்னேற்றம்'' என்னும் விடயம் தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமான ஒன்ருகும். இதனுல் கிறிஸ்தவ வாழ்க்கைச் சமூகங்கள் இன்றைய மக்களின் எண்ணங்களிலும் ஆசைகளிலும், விசேஷமாய் இளைஞர்களின் கருத்துகளிலும் வேட்கைகளிலும் நெருங்கிய முறையில் கலந்துகொள்கின்றன என்பது தெளிவாகின்றது.

''மக்களின் முன்னேற்றத்தில், சிறப்பாக பட்டினி, வறுமை, மக்களை அடிக்கடி வாட்டும் பொது நோய்கள், அறியாமை முதலியவைகளிலிருந்து விடுதலையடைய முயற்சிக்கும் மக்களினதும், நாகரீகத்தின் நலன்களைக் கூடுதலாய் அடையவும் மனித நலன்களை விருத்தி செய்யவும் விரும்புவோரினதும், அவைகளை நிறைவாக அடைதற்குக் கருத்தோடு உழைத்து வருவோரினதும், முன்னேற்றத்தில் திருச்சபை தனது கவனத்தைச் செலுத்துகின்றது'' என்று பரிசுத்த பாப்பரசர் 6வது சின்னப்பர் ''மக்களின் முன்னேற்றம்'' என்ற தமது புகழ்பெற்ற பொதுத் திருமுகத்தில் கூறுகின்ருர் (இ. 1).

உண்மையில், ''திருச்சபை தனது தெய்வீக நிறுவகரின் போதனையையும் சாதனையையும் தழுவி, கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொண்டுசென்ற நாடுகளில் மனித முன்னேற்றத்தை ஆதரித்து வளர்க்க ஒருபோதும் தவறியதே இல்லை. அதன் போதகர்கள் கோயில்களை மட்டுமல்ல, விடுதிச் சாலைகளையும், வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும், சர்வகலாசாலைகளையும் கட்டினுர்கள். இயற்கை வளங்களிலிருந்து கூடுதலான நலன்களை அடைதற்கு சுதேச மக்களுக்கு வழிவகைகளை அவர்கள் படிப்பித்ததுமல்லாமல், பல சந்தர்ப்பங்களில் அவர்களை அன்னியரின் அநியாய ஆசைகளிலிருந்தும் பாதுகாத்துள்ளனர்'' (ம. மு. இ. 12).

இன்று ஒரு சிலர் ஆன்மீக நலன்களை ஒதுக்கிவிட்டு, சடப்பொருள் சம்பந்தமான முன்னேற்றத்தில் மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்துகின்றனர். ஆனுல், திருச்சபை கிறிஸ்துநாதரின் படிப்பினையைப் பின்பற்றி, இறையன்பைப் பிறரன்பிலிருந்து பிரித்ததுமில்லை, முந்தியது பிந்தியதற்கு முரணுனதென்று கருதியதுமில்லை. இறையரசை நிறுவும் அதே வேளையில் மனிதனின் உலக வாழ்வையும் வளப்படுத்த முயன்று வந்துள்ளது. ''ஆன்மீக நலன்கள் இன்று உலகிற்குத் தேவைப்படுவதுபோல் சிலவேளை முன்னெருபோதும் தேவைப்படவில்லை.... அவைகளின் அறிவிப்பை ஏற்றுக்கொள்வதற்கு உலகம் முன்னெருபோதும் இல்லாத முறையில் தயாராகவும் உள்ளது. ஏனெனில், இன்பம் பொருள்களை வைத்திருப்பதில் மட்டும் தங்கியிருப்பதில்லை என்பதை செல்வத்தில் சிறந்த உலகின் பாகங்கள்கூட அனுபவத்தால் கண்டுபிடித்துள்ளன. ''மனிதன் அப்பத்தினுல் மட்டுமன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினுலும் உயிர் வாழ்கிருன்'' (மத். 4,4) என்ற ஆண்டவரின் அருள்வாக்கு எவ்வளவு உண்மையானதென்பதை அவை தங்கள் கசப்பான வெறுமை அனுபவத்தினுல் உணர்ந்து வருகின்றன'' (1971இல் விசுவாசப்பரப்புதல் தினத்திற்குப் பாப்பரசர் விடுத்த செய்தி).

ஆகவே, ''நிறைவான மனித நலக் கொள்கையையே நாம் இலக்காகக் கொள்ள வேண்டும். அது முழு மனிதனினதும் எல்லா மனிதரினதும் நிறைவான முன்னேற்றமன்றி வேறு யாது? ஆன்மீக நலன்களையும் அவைகளின் ஊற்ருகிய இறைவனையும் நாடாது, தன்னையே இலக்காகக் கொள்ளும் மனித நலக்கொள்கை உண்மையான சித்தியை

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## 5. இறைவெளிப்பாடு வழங்கப்பட்ட வழிகள்:

### (1) பாரம்பரியம்

இறைவெளிப்பாடு, இயேசுவில் நிறைவும் முற்றும் பெற்றதே தவிர, அவரில் ஆரம்பிக்கப்படவில்லை. இறைவன் தம்மையும், தமது மீட்புத் திட்டத்தையும், மனிதருக்கு அறிவிப்பது, அவர்களது சொந்த மீட்புக்கு மிக அத்தியாவசியம். கிறீஸ்துவின் நற்செய்திக்கு முன்னோடியாக, இறைவன் மக்களை ஆயத்தம் செய்திருக்கின்றார். வரலாற்றையும், மனிதரையும் பரிசுத்த ஆவியின் ஏவுதலுடன் இதற்குக் கருவியாகப் பாவித்திருக்கின்றார்.

பழைய காலத்தில் அன்புமிகு இறைவன் மக்களின் மீட்பை ஆர்வமுடன் கருத்தில் கொண்டு, தமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொருட்டு, ஓர் இனத்தைத் தெரிந்து கொண்டார். ஆபிரகாமுடனும், மோயீசன் வழியாக இஸ்ரேயேல் மக்களுடனும், ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வாறு தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்குத் தாமே உயிருள்ள ஒரே உண்மையான கடவுள் என்பதைச் சொல்லாலும், செயலாலும், வெளிப்படுத்தினார். இதனால் இஸ்ராயேல் மக்கள் தம்முடன் இறைவன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளார் என்பதை நடைமுறையில் கண்டு கொண்டனர்,

ஆரம்பத்திலிருந்து வாய்மொழியாக வழங்கப்பட்டுவந்த இறைவனின் வெளிப்பாடு, குருக்கள் இறைவாக்கினர்கள் ஆகியோரின் முயற்சியால் பல நூற்றாண்டுகளின் பின் நூல் வடிவிலும் வழங்கப்பட்டது. இவ்வாறு எழுந்த எபிரேய மக்களின் மறை நூல்களையே நாம் இப்போது **பழைய ஏற்பாடு** என்று அழைக்கின்றோம்.

உன்னத இறைவனின் முழு வெளிப்பாடும் ஆண்டவர் கிறீஸ்துவில் நிறைவு பெறுகின்றது. ''பற்பல முறையிலும், பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக.... பேசிய கடவுள் .... இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார்.'' (எபி. 1:1). கிறிஸ்து மீட்பளிக்கும் எல்லா உண்மைகளுக்கும், நல்லொழுக்கப் போதனைகளுக்கும் ஊற்றாகிய நற்செய்தியைப் போதித்து எல்லா மக்களுக்கும் அவ்வானகக் கொடையை வழங்க தம் அப்போஸ்தலர்களை அனுப்பினார்: ''உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' (மார்க் 16:15).

கிறீஸ்துவின் வாய்மொழியாலும், அவரோடு நடத்திய வாழ்வாலும், அவருடைய செயல்களாலும் தமக்குக் கிடைத்தவற்றையும், பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் தாம் கற்றவற்றையும் அப்போஸ்தலர்கள் தம் வாய்மொழிப் போதனையாலும், மாதிரியாலும், பழக்க வழக்கங்களினாலும் அளித்துச் சென்றனர். பரிசுத்த ஆவியின் ஏவுதலால் அப்போஸ்தலர்களும், அவருடைய சீடர்களும் மீட்பின் செய்தியை எழுத்து வடிவத்திலும் அளித்தனர். சந்தர்ப்பங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப நற்செய்தியை விளக்கி, கடிதங்களும், வேறு நூல்களும் எழுதினர். பாரம்பரியத்திலிருந்து இவ்வாறு எழுந்த நூல்களை திருச்சபை ஒன்றாகத் திரட்டி **புதிய ஏற்பாடு** என்ற தலைப்பின் கீழ் நமக்கு வழங்கியுள்ளது.

கிறீஸ்து அளித்த நற்செய்தியை முழுமையாகவும், உயிருள்ளதாகவும் திருச்சபையில் என்றும் வைத்துக்காக்க, அப்போஸ்தலர்கள் ஆயர்களை தம் வழித்தோன்றலாக ஏற்படுத்தி, தங்களுக்குப் பதிலாக போதிக்கும் அதிகாரத்தையும் அவர்களுக்கு அளித்தனர். அத்துடன் வாய்மொழி வழியாக அல்லது எழுத்து வடிவாக பெற்றுக்கொண்ட மரபு உண்மைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் (2 தெச 2:15), எப்போதைக்கும் அளிக்கப்பட்டவற்றை விசுவாசத்துடன் காக்கவேண்டுமென்றும் பணித்தார்கள். (1 திமோ. 6:20).

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமத்தைப்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு திருச்சபை தன் போதனையிலும் வாழ்விலும் வழிப்பாட்டிலும் தான் விசுவசிப்பவற்றையும், தன்னையுமே எல்லா தலைமுறைகளுக்கும் வழங்கி, அம்மரபை நிலை நிற்கச் செய்துள்ளது.

அப்போஸ்தலர்களிடம் இருந்து வந்த இம் மரபு அல்லது பாரம்பரியம் பரிசுத்த ஆவியின் உதவியால் திருச்சபையில் வளர்ந்தும் வருகிறது. ஏனெனில் மரபு வழியே நமக்கு வழங்கப்படும் உண்மைகளையும், வார்த்தைகளையும் புரிந்து கொள்வதில் வளர்ச்சி ஏற்படக்கூடும். இவ்வுண்மைகளையும், வார்த்தைகளையும் விசுவாசிகள் தங்கள் உள்ளத்தில் வைத்து, ஆழ்ந்து சிந்தித்து ஆராய்வதினாலும், தாங்கள் உய்த்துணரும் ஞான உண்மைகளை அறிவதினாலும், ஆயர்கள், அவர்களிடம் அதிகாரம் பெற்றவர்கள் ஆகியோரின் போதனையாலும், இவ்வளர்ச்சி ஏற்படுகின்றது. முக்கியமாக, விசுவசித்து, வழிபாடு செலுத்திவரும் திருச்சபையின் வாழ்விலும், வழக்கிலும் இம் மரபின் செல்வம் நிரம்பி நிற்கின்றது. அதே மரபின் வழியாகவே திருச்சபை திருமறை நூல்ப் பட்டியலையும் தீர்மானித்துள்ளது. இந்த மரபைக் கொண்டுதான் திருச்சபை திருமறை நூல்களிலுள்ள மறைக் கோட்பாடுகளினதும் ஒழுக்க விதிகளினதும் உண்மைக் கருத்தை எடுத்துரைக்கின்றது (இறைவெளிப்பாடு இ.7, 8.)

## இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

படி பிதாவை வேண்டுதல் செய்தார். இவ்வாறு ஒரு மணித்தியாலம் வரை செபித்தார்.

எனவே, தனிச்செபம் எமது வாழ்க்கையிலும் எத்துணை அவசியம் என்பதை கிறீஸ்துநாதர் இவ்வாறு எமக்குக் கற்பித்திருக்கிறார். இக்கட்டத்தில் மகாத்மாகாந்தி அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சிந்தனைக்குரிய நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகின்றது. அதை மகாத்மாகாந்தி அவர்களே கூறுகின்றார் கேட்போம்: ''ஒருமுறை நான் தென் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்தபொழுது ஒரு நாள் அங்குள்ள ஒரு கிறீஸ்தவ மடத்திற்கு சென்றிருந்தேன். அங்கே பல ஆச்சிரம வாசிகள் மௌன விரதம் அனுஷ்டித்துக்கொண்டிருந்தார்கள். அதற்கான காரணத்தை ஒரு ஆச்சிரம வாசியிடம் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் இதுதான். ''நாம் எல்லோரும் மனதிடம் பெற்றவர்களல்ல. இஷ்டப்படி பேசிவிடுகிறோம். உள்ளத்தில் தூய உண்மையையே பேசும் அந்தராத்மா ஒன்றிருக்கிறது. அதுதான் சத்தம். நமக்குக் கேட்கவேண்டுமானால் நாம் மௌனமாக இருக்கவேண்டும். நாம் சத்தம் போட்டால் அந்தராத்மாவின் உண்மைக் குரல் நமக்கெட்டாது'' என்றார். அன்று அத்துறவி செய்த போதனையின் பொருளை இன்று நான் அனுபவரீதியாக கண்டு கொண்டேன். அது மிக உயர்ந்த சாதனம். உண்மையை நாடுபவனுக்கு மௌனம் அத்தியாவசியம். மௌனத்தின் பலனை நான் நன்றாக அறிந்தவன்'' என்கிறார் மகாத்மா.

''நீயோ என்றால் செபம் செய்யும்போது உன் அறைக்குள் பிரவேசித்துக் கதவைச் சாத்தி அந்தரங்கத்தில் உன் பிதாவைப் பிரார்த்தித்துக்கொள். அப்போது அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதா உனக்குப் பலன் அளிப்பார்'' (மத். 6:6) என்று கூறுகிறார் கிறீஸ்துநாதர். உயிரும் உடலுமாக உண்மையாகவே திவ்விய நற்கருணையிலே வீற்றிருக்கும் கிறீஸ்துநாதர் முன் தனிச் செபம் செய்வது மேலானதாகும். எனவே திவ்விய நற்கருணை தினமும் வைக்கப்பட்ட பங்குத் தேவாலயங்களுக்குப் போக வசதியுள்ளவர்கள் தினமும் தேவாலயத்திலேயே தனிச் செபத்தை அனுசரிக்கலாம். அவ்வாறு தேவாலயங்களுக்குப் போக வசதியற்றவர்கள் வீட்டிலோ மற்றும் தங்கியிருக்கும் விடுதிகளிலோ ஒரு நாளில் ஒரு அரை மணித்தியாலத்தை என்கிலும் தனிச் செபத்தில் செலவிடுவது நன்றாகும்.

மனிதன் தனித்துக் கடவுளைத் தியானிக்கும் கடமையினை கைதவற விட்டதனாலே தான் இன்று உலகிலே பாவச் செயல்கள் மனச்சாட்சிக்கு எதிரான முறைகேடுகள் மலிந்து வருகின்றன என்பது சொல்லாமலே விளங்கும்.

ஆகையினால், விசுவாசிகள், குறிப்பாக இளைஞர் இளம் பெண்கள், தாங்கள் தொழில் புரியும் தொழில் கூடங்களில், தாங்கள் வசிக்கும் இடங்கள் இவற்றில் ஏற்படக்கூடிய தீமைகள், கஷ்டங்கள், துன்பங்கள், பாவச்சந்தர்ப்பங்கள், கற்பினைக் களங்கப்படுத்தும் நாசகார சக்திகள் இவற்றினின்று விடுதலை பெற, மன அமைதி பெற, தனித்து செபிக்கும் முறை அத்தியாவசியமாகும்.

எனவே, விசுவாசிகள் பொது வழிபாட்டிலும் கலந்துகொள்ள வேண்டும். தனிச் செபத்திலும் கவனம் செலுத்த வேண்டும் எனத் திருச்சபை வலியுறுத்துகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## பாகம் I

### லூக்காஸ் சுவிசேஷம்

1. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

அ) "உங்கள் .................... எங்குள்ளதோ, அங்கே உங்கள் .................... இருக்கும்"

ஆ) "எவனிடம் அதிகம் ஒப்படைத்தார்களோ, அவனிடம் இன்னும் .................... ...................."

இ) "இதோ .................... சிலர் முதவாவர், முதலானோர் .................... ...................."

ஈ) "தன்னை .................... எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் .................... உயர்த்தப்படுவான்"

உ) "உப்பு .................... ஆனால், உப்பு .................... வேறு எதனால் சாரம் ஏற்றப் பெறும்"

ஊ) "மனம் திரும்பும் ஒரு .................... குறித்து வானகத்தில் மிகுந்த .................... உண்டாகும்"

எ) "அப்பா வானகத்துக்கு .................... உமக்கு .................... குற்றம் செய்தேன்"

ஏ) "இதோ இத்தனை .................... உமக்கு .................... செய்து வருகிறேன்"

ஐ) "எந்த வேலைக்காரனும் .................... .................... ஊழியம் செய்யமுடியாது"

2. மூன்றிற்கு சந்தர்ப்பம் கூறுக.

அ) "அம்மா, உன் நோயினின்று நீ விடுபட்டாய்"

ஆ) "விலைமாதரோடு உமது சொத்தையெல்லாம் அழித்துவிட்ட இந்த மகன் வந்தபொழுது, அவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கின்றீரே"

இ) "அநீத செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால், உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவர் யார்?"

ஈ) "பத்துப் பேரும் குணமடையவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே?"

உ) "கடவுளின் அரசைக் குழந்தைபோல ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது"

## பாகம் II

### திருமறை விளக்கம்

1. பொருத்தமான சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக.

அ) படைக்கப்பட்ட ஒரு பொருளை கடவுளாக மதித்து வணங்கினால் அது .................... .................... ஆகும்.

ஆ) கடவுள் தாம் படைத்த பொருளுக்கு கொடுக்காத சக்தி அப்பொருளில் மறைந்திருப்பதாகக் கூறுவது .................... அல்லது .................... என்னும் பாவமாகும்.

இ) நாம் பரிசுத்தர்களை வணங்குவதற்குக் காரணம்: 1. ....................
2. ....................

ஈ) பரிசுத்தர்களை நமக்கு நினைப்பூட்டும் பூசிதமான நினைவுச் சின்னங்களை நாம் .................... .................... எனச் சொல்லுகிறோம்.

உ) அருள் நிறைந்த மரியாயே, என்னும் செபத்தில் .................... பகுதிகள் உள.

ஊ) கன்னிமரியம்மாளுக்கு நாம் தனிப்பட்ட வணக்கம் செலுத்தக் காரணம்:
1. ....................
2. ....................

எ) கடவுளை நிந்தித்து அவரைப் பற்றி பழிச் சொற்களைச் சொல்லுவது .................... என்னும் பாவமாகும்.

2. பின்வரும் கூற்றுக்கள் சரியா, பிழையா எனக் கூறுக.

அ) வானொலி வழியாக அல்லது தொலைக் காட்சி வழியாக பலிப்பூசை காண்பதன் மூலம் ஞாயிறு கடனை நிறைவேற்றலாம்.

ஆ) நம் பெற்றோர்கள் கடவுளின் பிரதிநிதிகள்.

இ) முதியவர்கள் மட்டில் நாம் மரியாதையாய் நடந்துகொள்ள வேண்டியதில்லை.

ஈ) முறையாக ஏற்படுத்தப்பட்ட ஓர் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு குடிமக்கள் அமைந்து நடத்தல் வேண்டும்.

உ) நம் உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்.

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாணவர் மன்றம்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

### பாகம் III

**பின்வரும் கூற்றுக்களில் ஒன்றிற்கு உமது அபிப்பிராயங்கள், மதிப்பீடுகள் முதலியன கொண்ட விளக்கம் தருக.**

*(விடை நூறு சொற்களுக்குக் குறையாமலும், நூற்றைம்பது சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்)*

அ) ''இயேசு வளர வவர ஞானத்திலும் முதிர்ந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் மென் மேலும் உகந்தவரானர்''

ஆ) ''நல்லவன் தன் உள்ளமாகிய நற் கருவூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக் கொடுக்கிருன். தீயவனே தீயதினின்று தீய வற்றை எடுத்துக் கொடுக்கிருன். ஏனெனில், உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்''

---

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி

**மறைக்கல்விப் போட்டி - 4**

**(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1-8-72)**

மாணவன்/மாணவி பெயர்:....................

..........................................................

பாடசாலையின் பெயரும் முகவரியும்:........

..........................................................

..........................................................

..........................................................

மாணவன்/மாணவியின் கையொப்பம்

..........................................................

தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

---

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:—

**அருள்திரு றெக்ஸ் யோ. செபமாலை அடிகள்**

ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

*பாடம் 36: நாம் செபிக்குமாறு இயேசு நாதர் கற்பிக்கிருர்.*

இப்பாடம் க. தி. வி. 70ம் பாடமாகும்.

*சிந்தித்துப்பார் விடைகள்:*

1. ஞானஸ்நானத்தின் மூலம் நாம் கடவுளின் பிள்ளைகளானதினுல், கடவுளைப் பார்த்து ''எங்கள் பிதாவே'' என்று அழைக்க அனுமதிக்கப்பட்டுள்ளோம்.

2. கர்த்தர் கற்பித்த செபத்தின் முதல் மூன்று மன்ருட்டுக்களிலும், கடவுளுக்கு உரித்தான மரியாதை உண்டாகும்படியும் அவரின் திருப்பெயரை எல்லோரும் போற்றிப்புகழ்ந்து மகிமைப்படுத்த வேண்டும் என்றும், அவர் நம்மேல் ஆட்சிபுரிய அவருடைய அரசு இவ்வுலகில் வருமாறும், மோட்சத்தில் உள்ள சம்மனசுக்கள், பரிசுத்தர்களைப்போல், உலக மக்கள் எல்லோரும் அவருடைய பரிசுத்த சித்தத்தின்படி நடக்க வேண்டும் என்றும் கேட்கிறேம்.

3. இறுதி நான்கு மன்ருட்டுக்களிலும், நமக்குத் தேவையான நன்கொடை, அநுதின உணவு, மற்றும் நம் வாழ்க்கைக்குத் தேவையான யாவற்றையும் கேட்கிறேம், மற்றவர்கள் நமக்கு எதிராகச் செய்யும் குற்றங்களை மன்னிக்க நாம் தயாராக இருக்கிறபடியால், நாம் செய்யும் பாவங்களையும், கடவுள் மன்னிக்க வேண்டும் என்றும், பாவச்சோதனைகளை மேற்கொள்ள நமக்குப் போதுமான வலிமை, இல்லாததினுல், அவைகளிலிருந்து நம்மைக் காக்கும்படியும், எல்லாவித கேட்டிலிருந்தும், தின்மையினின்றும், கடவுள் நம்மைப் பாதுகாக்கும்படியும் மன்ருடுகிறேம்.

**பயிற்சி:**

**கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. கர்த்தர் கற்பித்த செபத்தில்................ ..................... மன்ருட்டுக்கள் அடங்கியுள்ளன.
2. செபம் என்ருல் கடவுளோடு................ ......................
3. நாம் செபம் செய்யும் பொழுது கடவுளை நோக்கி நமது ஆத்துமத்தை எ................... அவரோடு பே............... அவரைப் பு........................ அவரை மகி........................ அவருக்கு ந................. செலுத்துகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மே மாதம் திருகோணமலை...

[10ம் பக்கத் தொடர்ச்சி]

அடைய முடியாது.... ஒப்பற்ற இறைவனை நாடாத, மனித வாழ்க்கைக்கு உண்மைக் கருத்தை அளிக்கும் அழைத்தலை உணராத, மனிதநலக்கொள்கை உண்மையானதாய் இருக்கவே முடியாது'' (ம. மு. இ. 42).

கிறிஸ்தவ வாழ்க்கைச் சமூகங்களின் உறுப்பினர் பரிசுத்த பாப்பரசரின் மேற் கூறிய படிப்பினைகளை நன்ருகச் சிந்தித்து, தங்கள் செயல் திட்டங்களை உருவாக்குவார் களாக. எமது மறை மாவட்டத்தில் சமூக அப்போஸ்தல பணித் துறையில் அவர்கள் செய்யக்கூடிய தொண்டுகள் ஏராளம் உண்டு. திருகோணமலையில் சமூக சேவை நடுநிலையம் நிறைவேற்றியுள்ள சிரமதான வேலைகளும், வீடமைப்புத் திட்டங்களும், மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள கடுக்காய்முனையில் வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு கிறிஸ்தவ சபைகள் ஒன்ருகச் சேர்ந்து நிறை வேற்றிய வீடமைப்புத் திட்டமும் அவர்கட் குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கு கின்றன.

இத்தருணத்தில், பரிசுத்த திரித்துவத் தின் திருவிழா (வைகாசி 28ம் நாள்) இலங் கையில் மறைக்கல்வி விழாவாக அனுசரிக்கப் படுகின்றது என்பதை நினைவூட்ட விரும்பு கிறேன். இவ்வருடம் இவ்விழாவுக்கு **''குடும் பமே கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில்''** என்ற பொருள் குறிக்கப்பட்டுள்ளது. இதோ, கிறிஸ்தவ வாழ்க்கைச் சமூகங்கள் நம் சிருர் களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காகப் பணி புரிவதற்குரிய சிறந்த, பரந்த துறை.

மக்களின் பொருளாதார, கலாச்சார, ஆன்மீக வாழ்க்கையை வளப்படுத்த உழைக் கும் அதே வேளையில் கிறிஸ்தவ வாழ்க்கைச் சமூகங்களின் உறுப்பினர் இறையன்பில் வளம் பெற்றுவர முயற்சிப்பார்களாக. இதுவே அவர்கட்கு உறுதியையும் வெற்றிக்கு உத்தர வாதத்தையும் அளிக்கும்.

மகாநாடு நனிசித்தி அடையவேண்டு மென்று நல்லாசி கூறி, எல்லோரையும் அன் புடன் ஆசீர்வதிக்கின்றேன்.

இங்ஙனம்
நம் ஆண்டவரில்
உங்கள்மேல் அன்புகூரும்,

**வ. தியோகுப்பிள்ளை**
மறைமாவட்டத்தின் பரிபாலகர்.

## அறிவீனம்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கர்களின் வீடு இப்படிப்பட்டது. ஆனால், நாஸ்திகர்களின் வீடோ அத்திவாரமின்றி மண்ணில் கட்டப்பட்ட வீட்டுக்கு ஒப்பா னது. இவ்வீட்டின் மீது நதி வந்து மோதவே அது விழுந்து சேதமும் மிகுதியாகும். இந் நிலை இவர்களுக்குச் சமீபித்திருக்கின்றது என் பதை உணரவில்லை போலும்.

எக்காரியத்துக்கும் தேவையான மூலப் பொருளை நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஒன்று என்ற இலக்கத்தின் பின் பூச்சியங்க ளைச் சேர்த்தாற்ருன் அது நூருகவும், ஆயிர மாகவும், கோடியாகவும் வரும். ஆனுல், அந்த ஒன்று என்ற இலக்கத்தை அழித்து விட்டால் மிகுதிக்கு மதிப்பு உண்டாகுமா? ஒன்றினுல்த்தானே அவற்றிற்கு மதிப்பு உண் டாகிறது. அவ்வொன்றே கடவுள். சாத் தானைக் கடவுளாகக் கொள்பவர்களுக்கு இது எங்கே புரியப்போகிறது.

கடவுள் கருணையுள்ளவர். அவருக்கும் சோதனையா? அவரே இல்லை என்று புற்றீசல் போலச் சில நாசகாரர்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவரை நேசித்துச் சேவித்து அவரிட்ட பணிகளை நிறைவேற் றவே அனந்த செல்வங்களையும், சுகபோகங் களையும் தந்து நம்மை உண்டாக்கினுர். உண் டாக்கினவருக்கே உலை வைக்க எண்ணும் இச்சதிகாரர்கள் தங்கள் உடும்புப் பிடியைக் கைவிடமாட்டார்களா? ஆழமான சமுத்திரத் தில் சென்ற கப்பலின் சுக்கான் உடைந்து விட்டால் அது தட்டுத்தடுமாறித் தவிப்பது போல இவர்களும் அடையத்தானே போகி ருர்கள்.

''இவர்கள் அறியாமல் செய்கிருர்கள். இவர்களை மன்னியும்'' என்று உம் பரலோக பிதாவிடம் வேண்டினீரே. ஆனுல், இன்னும் சிலரிடத்தில் அறிவீனம் என்னும் இருள் அகலவில்லையே. ஆரும் அறிவாம் பகுத்தறிவு எப்பொழுது செயல்படத் தொடங்குமோ?★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அருட்திரு பெலிசியன் பெர்ணண்டோ அடிகளாரின் சடுதி மரணம்

சென்ற 30-5-72 ஞாயிற்றுக்கிழமை ஹிங்குராக்கொடைப் பங்குத் தந்தை அருட்திரு. பெலிசியன் பெர்ணண்டோ அடிகளார், சடுதியாய் மரணமானார்.

இவர் 9-6-1922ல் சிலாப மேற்றிராசனத்தின் மாறவில எனும் ஊரில் பிறந்தவர். இவரின் தந்தையார் பெயர் அகுஸ்தின் பெர்ணண்டோ, தாயார் பெயர் சிடோசியா பெரேரா.

வென்னப்புவை யோசப் வாஸ் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் இறைவனின் அழைப்பை உணர்ந்து, ஒரு குருவாகத் திட்டமிட்டார். திருமலை மேற்றிராசனத்தைச் சேர்ந்து, இந்தியாவில், திருச்சிராப்பள்ளியில் உள்ள புனித சின்னப்பர் குருமடத்தில் தனது குருத்துவப் படிப்பினை முடித்து 25-3-53ல் குருப்பட்டம் பெற்றார்.

துணைக் குருவாக ஓராண்டு அம்பாறையில் பணியாற்றியபின், திருமலையிலுள்ள தம்பலகாமம், சினன்வாடி, கந்தளாய் ஆகிய இடங்களில் வெகுகாலம் சேவையாற்றினார். இக்காலத்தில் இவரை நீரழிவு நோய் வருத்தத் தொடங்கியது. அத்துடன் இவருடைய கண் பார்வையும் குறையத் தொடங்கியது. ஆயினும், தளராத மனதுடனும், இன்முகத்துடனும் தனது பிணியையும், அதனால் ஏற்பட்ட அகோர விளைவுகளையும் மூடிமறைத்து இரக்கமும், கடமை உணர்ச்சியும் படைத்தவராக விளங்கினார்.

ஈற்றில் சென்ற வருடம் சித்திரை மாதத்தில் ஹிங்குராக்கொடைக்குப் பங்குத் தந்தையாக அனுப்பப்பட்டார். இங்கும் அவருடைய பழைய நோய் அவரை விடாது தொடர்ந்து வந்தது. அண்மையில் கடின வியாதியாய் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபொழுது இறைவனடி சேர்ந்தார்.

அருட்திரு. பெலிசியன் அடிகளார் காலமானபோது அவருக்கு வயது நாற்பத்தொன்பதாகும். இவர் சிறந்த பண்பும் பரந்த நோக்கும் கொண்ட ஒரு உத்தம குரு. அன்னாரின் அடக்கச் சடங்குகள் மட்டக்களப்புப் புனித மரியநாயகி உடன் மேற்றிராசன ஆலயத்தில் துணை ஆயர் பேரருள் திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்பட்டது. குருமார், கன்னியர், துறவறச் சகோதரர்கள், உற்றார் உறவினர், அவரின் சேவையின் பயனைப்பெற்ற மக்கள் குழாம் ஆகியோர், தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்த மேற்றிராசனத்தின் பலபாகங்களில் இருந்தும், அவரின் பிறப்பகத்தில் நின்றும் வந்திருந்தனர்.

கருணை நிறை இறைவன் இவரின் விசுவாச வாழ்விற்கு ஏற்ற சம்பாவனையை அளிப்பாராக.

## மறைக்கல்விப் போட்டி – 2

### பரிசு பெறுபவர்கள்

1. செல்வி ஆன் தைரியர் – கோ. வ/வத்தளை புனித அன்னம்மாள் மகாவித்தியாலயம்
2. செல்வி ச. மேரிராணி – ம/மகாவித்தியாலயம் இறம்பைக்குளம், வவுனியா.
3. செல்வி ரோசறி யோ. தொமஸ் – றோ. க. த. க. பாடசாலை பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.

குறிப்பு:— திருத்திய விடைப்பத்திரங்களைப் பெற விரும்புகிறவர்கள் எல்லாரும் முகவரியும் முத்திரையுமுள்ள நீண்ட உறை அனுப்பி வைக்கவும்.

அருட்திரு றெக்ஸ் யோ. செபமாலை
22–6–72

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-7-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media